கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், கும்பகோணம்
முன்னிலை. திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (விரைவு நீதிமன்றம்),
கும்பகோணம்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**அ.வ.எண்.100/2025 ல் இ.ம.எண். 7/2026**

கண்ணையன், சிறப்பு அதிகார முகவர்
கோவிந்தராஜன் மூலமாக. .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) மதியழகன்.
2) செந்தில்குமார்
3) ராமதாஸ்
4) ஜெயகுமார்
5) சக்கரவர்த்தி
6) ஜெயவேல்
7) நிர்வாக அதிகாரி, அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் கோவில், கும்பகோணம்.

...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 12.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. கே.ஆர்.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 4, 5 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. சி.நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ரஞ்சித்குமார் அவர்கள் முன்னிலையாகியும் 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி.எம். வைத்தியநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது, பிரிவு 151 சி.பி.சி–ன்கீழ், மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, மனுவில் கண்ட காரணங்கள் அடிப்படையில், வாதுரைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கினை மீண்டும் திறக்க உத்தரவிட கோரப்பட்டுள்ளது.

JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:44:02 +0530

**2)** மனுதாரர் / வாதி தன் பிரமான பத்திரத்தில், தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுத்த சண்முகசுந்தரம் என்பவரின் தாய் மாமா சுப்ரமணியன் என்பவர் தாவா சொத்தை பொறுத்து இரண்டு பதிவான பெந்தக பத்திரங்களை மேத்தா என்பவருக்கு எழுதி கொடுத்துள்ள விவரம் தற்போது தெரிய வந்ததாகவும் அதன் அடிப்படையில் தாவா சொத்து மேற்படி சண்முகசுந்தரத்தின் தாய் மாமா குடும்பத்தின் சொத்து என்பது தெளிவுபடும் என்றும் தாவா சொத்து 7–ம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமானது என பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்து வரும் நிலையில், மேற்படி கட்சி சரியானதல்ல என்பதை நிரூபிக்கவும் தாவா சொத்து மேற்படி ஆவணங்களின் அடிப்படையில், உரிய நபர்களால் வாதிக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தவும் வேண்டி, அந்த பெந்தக பத்திரங்களின் சான்று நகல்களை மற்றொரு மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த ஆவணங்களை குறியீடு செய்து உரிய சாட்சியம் அளிக்க வேண்டி வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள அசல் வழக்கினை மீண்டும் திறக்க வேண்டியது அவசியமாக உள்ளதாகவும் அதனால் மனுவை அனுமதித்து அசல் வழக்கினை திறக்க உத்தரவிட வேண்டுமென கோரியுள்ளார்.

**3)** மாறாக 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள், தாக்கல் செய்துள்ள எதிர்உரையில், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் இருதரப்பு விசாரணை முடிந்து வாதுரைக்காக வழக்கு போடப்பட்டுள்ள நிலையில் வேண்டுமென்றே காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் / வாதி இதுநாள் வரை நான்கு வழக்கறிஞர்களை மாற்றி மாற்றி வழக்கினை நடத்தி வருகிறார் என்றும் ஒவ்வொரு முறையும் இதுபோன்று காலம் கடத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் எனவே, அசல் வழக்கினை மீண்டும் திறக்க கோரும் இந்த மனுவை அனுமதிக்கக்கூடாதென்றும் அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

**4)** 7ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கானது ஆரம்பத்தில் கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.254/2014


JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:44:08 +0530

ஆக தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கினை மனுதாரர் இழுத்தடித்து வருகிறார் என்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் வாதுரை கேட்கப்பட்ட நிலையில், வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்றும் மனுவில் கூறப்படும் ஆவணங்களின் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் 3ம் நபர் சம்பந்தப்பட்டவைகளாக காணப்படுகின்றன என்றும் ஆவணத்தில் கண்ட நபர்கள் தான் மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க இயலும் என்றும் எனவே அசல் வழக்கினை மீண்டும் திறக்க கோரும் இந்த மனுவை அனுமதிக்க இயலாது என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

5) இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

6) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது, வாதி /மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பதும், அசல் வழக்கில் இருதரப்பு விசாரணை முடிவுற்று வாதுரை கேட்க வேண்டி வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்து, மற்றொரு மனுவுடன் தாக்கல் செய்துள்ள சார்பதிவாளர் சான்றிட்ட பெந்தக பத்திர ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்கவும் சான்றாவணங்களை குறியீடு செய்யவும் வேண்டி, அசல் வழக்கினை மீண்டும் திறக்க உத்தரவிட கோரப்பட்டுள்ளது. தாவா சொத்து சம்பந்தமான சார்பதிவாளர் சான்றிட்ட பெந்தக பத்திர ஆவணங்களை ஏற்க கோரும் மனுவான இஏ.எண்.6/2026 மனுவானது மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மை, ஏற்பு தன்மை மற்றும் நிரூபணத்தன்மைக்குட்பட்டு ஏற்க உத்தரவிடப்பட்டு இன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு, அசல் வழக்கினை மீண்டும் திறக்க கோரும் இம்மனு பரிகாரம் குறித்து பரிசீலிக்கும் போது, எதிர்தரப்பில், 2014ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கானது, வேண்டுமென்றே காலம் கடத்தப்பட்டு வந்து அதனால் எதிர்மனுதாரர்கள் தேவையின்றி

அலைகழிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது, முதன்முதலில் கும்பகோணம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 2014ம் ஆண்டு உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.254/2014 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, இருதரப்பு விசாரணை முடிவுற்ற நிலையில், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரமும் கோரி திருத்தப்பட்ட நிலையில், அசல் வழக்குரை சொத்து மதிப்பானது ரூ.45,37,600/- என்பதால் உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கடந்த 20.02.2025 அன்று வழக்குரை திருப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் அசல் வழக்கானது, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 10.03.2025 மற்றும் 01.04.2025 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 03.04.2025 அன்று அ.வ.எண். 100/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு கடந்த 21.04.2025 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் கடந்த 03.07.2025 அன்று இந்நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு கடந்த 17.07.2025, 01.08.2025 மற்றும் 14.08.2025 ஆகிய தேதிகளில் தரப்பினர்களின் வழக்கறிஞர்கள் ஆஜராகிய நிலையில், வாதுரைக்காக கடந்த 20.08.2025க்காக வாய்தா போடப்பட்டு அன்றைய தினம் வாதுரை கேட்கப்பட்டு தீர்ப்பிற்காக 28.08.2025க்கு போடப்பட்டது. அன்றைய தினம் (28.08.2025) 7-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி, அசல் வழக்கினை திறக்க கோரி மனுக்கள் தாக்கல் செய்து அதன் பேரில் அசல் வழக்கானது கடந்த 02.09.2025 மற்றும் 03.09.2025 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டு, 7ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஏற்கப்பட்டு கடந்த 08.09.2025 அன்று கூடுதல் எழு வினாக்கள் வனையப்பட்டு, சாட்சிய விசாரணைக்காக வாய்தா கடந்த 12.09.2025 மற்றும் 15.09.2025 தேதிகளில் போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில் கடந்த 23.09.2025 அன்று வா.சா.5 முதல் விசாரணை செய்யப்பட்டு 24.09.2025 ல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக 06.10.2025க்கு வாய்தா போடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 06.10.2025 அன்று பி.சா.4 முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக கடந்த



JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:44:22 +0530

08.10.2025, 09.10.2025, போடப்பட்டு கடந்த 10.10.2025ல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.5 கடந்த 05.11.2025 அன்று விசாரணை செய்யப்பட்டு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரைக்காக கடந்த 10.11.2025, 12.11.2025, 19.11.2025 24.11.2025 மற்றும் 25.11.2025 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டது. இந்நிலையில் கடந்த 25.11.2025 அன்று பிரதிவாதிகள் தரப்பில் மேலும் சாட்சிகளை விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு, படி கட்டப்பட்டு, அதன் அடிப்படையில் 11.12.2025, 17.12.2025 ஆகிய தேதிகளில் சாட்சி விசாரிக்கப்பட்டு 19.01.2026 அனறு பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட நிலையில், வாதி தரப்பில் சாட்சியம் விசாரிக்கப்பட வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் பேரில், கடநத 04.02.2026 மற்றும் 05.02.2026 ஆகிய தேதிகளில் வாதி தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டு கடந்த 09.02.2026 தேதி வாதுரைக்காக வாய்தா போடப்பட்டது. அதன் பின்னர் கடந்த 11.02.2026, 13.02.2026 18.02.2026, 23.02.2026, 04.03.2026, 06.03.2026 09.03.2026 மற்றும் 11.03.2026 ஆகிய தேதிகளில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், வாதி /மனுதாரர் தரப்பில், ஆவணங்களை ஏற்க கோரியும், அதன் பொருட்டு அசல் வழக்கினை மீண்டும் திறக்கவும், வா.சா.1யை மீண்டும் அழைக்கவும் கோரி ஐ.ஏ.எண்.05/20206, 06/2026 மற்றும் 07/2026 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில், வாதி இதுநாள் வரையில் இரண்டு முறை வழக்கறிஞரை மாற்றம் செய்துள்ளார் என்பதும், அவர் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்காக வேண்டி, நான்கு முறை வழக்கினை திறக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்பதும் கோப்புகள் மூலம் தெரிய வருகிறது. இந்த வழக்கு பிரச்சனை கடந்த 201ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது என்பதும் வழக்கானது கடந்த 2014ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது என்பதும் தெரிய வருகிறது. வாதி / மனுதாரர் அசல் வழக்கில் தன் தரப்பு கட்சியை தெளிவுபடுத்தி நிரூபிக்க வேண்டி இரண்டு சார்பதிவாளர் சான்றிட்ட பெந்தக பத்திரங்களை ஏற்க கோரிய மனுவான ஐஏ.எண்.6/2026 மனு இன்று அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் பொருட்டு, அசல் வழக்கினை திறக்க உத்தரவிட கோரும் இந்த மனுவையும் அனுமதிப்பதே சரியானதாக அமையும். அதேசமயம், வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும்



JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:44:28 +0530

போது, வாதி வழக்கினை முறையாக விரைவாக நடத்த முன்வராமல், காலம் கடத்தி வந்துள்ளார் என்பதும் இதுநாள் வரை நான்கு முறை அசல் வழக்கினை திறக்க கோரி மனு தாக்கல் செய்து காலம் கடத்தி வந்துள்ளார் என்பதும் மேலே விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்ட வகையில் தெரிய வருகிற நிலையில், இந்த மனுவினை தொகை செலுத்த நிபந்தனை விதித்தும், அந்த வாய்தா தேதியிலேயே சாட்சியை விசாரணை செய்து முடிக்க வேண்டுமென்றும் அனுமதிப்பதே சரியானதாக அமையும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, அந்தபடிக்கு இந்த மனுவை அனுமதித்து இந்த மனு பிரச்சனைக்கு முடிவு காணப்படுகிறது.

முடிவில், இம்மனுதாரர் / வாதி எதிர்வரும் 16.03.2026ம் தேதிக்குள் ரூ.5,000/-யை, செயலாளர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, தஞ்சாவூர் (The Secretary, District Legal Services Authority, Thanjavur) -ல் செலுத்தி அதற்கான ரசீதினை பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மேலும் அன்றைய தினமே, வாதி தன் தரப்பு சாட்சியை விசாரணை செய்ய வேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கப்படுகிறது. அழைக்க. 16.03.2026.

இந்த உத்தரவு இன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:44:34 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.